Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | CC 184/2023 |
| Deposition of witness for | :: | PW. 4 |
| Name | :: | மருத்துவர் கணேஷ் |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Caste | :: | |
| Calling | :: | |
| Religion | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2024

---

எதிரி ஆஜர்.
08.07.2024
முதல் விசாரணை:

1. நான் தற்போது பந்தல்குடி அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.01.2023 ம் தேதி அசா.3 சந்திரசேகர் நாகரத்தினத்திற்கு விபத்து ஏற்பட்டதாக காலை 11.00 மணியளவில் என்னிடம் சொன்னார். நான் அருப்புகோட்டை அரசு மருத்துவமனைக்கு வந்து அவரை காப்பாற்றி விடலாம் என்று முயற்சி செய்து எங்களது அலுவலக வாகனத்தை அனுப்பி வைத்து அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தோம். வரும் வழியிலேயே அவர் இறந்துவிட்டார். இது சம்மந்தமாக அவர் மனைவி புகார் கொடுத்தார். புகார் மனுவில் நான் அறிவேன் சாட்சி 2 ஆக கையெழுத்து செய்தேன். **(புகார் மனுவில் உள்ள 2 வது அறிவேன் சாட்சி கையெழுத்து அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** ராமநாயக்கன்பட்டி விலக்கு அருகே நாகரத்தினம் சென்று கொண்டிருந்தபோது கார் வேகமாக வந்து அடித்து விட்டதாக சொன்னார்கள்.

**எதிரி தரப்பில் கு வி**

1. அசாஆ.1 புகார் மனு யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது

என்றால் ஆமாம். புகார் மனுவில் நானும், சந்திரசேகரன், முத்துமாரி ஆகியோர் கையெழுத்து செய்தோம் என்றால் ஆமாம்.

2. காயம்பட்ட நாகரத்தினத்திற்கு தலையில் ரத்த காயம் ஏற்பட்டிருந்தது. மற்றும் தோள்பட்டை, தாடை ஆகிய பகுதிகளில் காயம் ஏற்பட்டிருந்தது. ெஹல்மெட் அணிந்திருந்தால் ஒரு வேளை மரணத்தை தடுத்திருக்கலாம் என்றால் அது மோதிய வேகத்தை பொறுத்தது.

3. நான் சம்பவ சமயத்தில் பந்தல்குடி மருத்துவமனையில் பணிபுரிந்து வந்தேன். சம்பவத்தை கேள்விபட்டு அருப்புகோட்டை அரசு மருத்துவமனைக்கு வந்தேன்.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | CC 184/2023 |
| Deposition of witness for | :: | PW. 3 |
| Name | :: | **சந்திரசேகர்** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Caste | :: | |
| Calling | :: | |
| Religion | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2024

---

எதிரி ஆஜர்.

**08.07.2024**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது பந்தல்குடி அரசு மருத்துவமனையில் வட்டார சுகாதார மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்து போன நாகரத்தினம் என்னுடன் வேலை செய்தவர் ஆவார். கடந்த 27.01.2023 ம் தேதி காலை 11.00 மணியளவில் சிதம்பராபுரத்தை சேர்ந்த பஞ்சாயத்து செயலாளர் பாலகிருஷ்ணன் எனக்கு போன் செய்து நாகரத்தினத்திற்கு ராமநாயக்கன்பட்டி விலக்கு அருகே விபத்து நடந்ததாவும் அவருடைய அடையாள அட்டையை பார்த்து எனக்கு போன் செய்து சொன்னார்கள்.

2. நான் என்னுடைய அலுவலகத்தில் இருந்து 10 நிமிடத்தில் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன். அவர் இறந்து தலைகுப்புற கிடந்தார். நான் சென்று பார்த்தபோது அங்கிருந்த பொதுமக்கள் ஒரு கார் வந்து அவர் மீது மோதி விட்டதாக சொன்னார்கள். நாகரத்தினம் இருசக்கர வாகனத்தில் சென்றதாகவும் சொன்னார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். இது சம்மந்தமாக அவரது மனைவி புகார் மனு கொடுத்தார். நான் அறிவேன் சாட்சி கையெழுத்து செய்தேன். **(புகார்**

**மனுவில் உள்ள அறிவேன் சாட்சி முதல் கையெழுத்து அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் கு வி**

1. அசாஆ.1 புகார் மனு யார் எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். புகார் மனுவில் நானும், கணேஷ், முத்துமாரி ஆகியோர் கையெழுத்து செய்தோம் என்றால் ஆமாம்.

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | CC 184/2023 |
| Deposition of witness for | :: | PW. 2 |
| Name | :: | **பிரின்சிகாவேணி** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Caste | :: | |
| Calling | :: | |
| Religion | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2024

---

எதிரி ஆஜர்.

**08.07.2024**

**முதல் விசாரணை :**

1. நான் தற்போது மதுரையில் வங்கியில் வேலை பார்த்து வருகிறேன். கடந்த 27.01.2023 ம் தேதி நான் அருப்புகோட்டையில் எனது வீட்டில் காலை 11.30 மணியளவில் இருந்தபோது எனக்கு போன் வந்தது. எனது அப்பாவிற்கு விபத்தாகிவிட்டது என்றும் அருப்புகோட்டை அரசு மருத்துவமனைக்கு வர சொன்னார்கள். அங்கு சென்று பார்த்தோம், எனது அப்பா இறந்துவிட்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் கு வி**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | CC 184/2023 |
| Deposition of witness for | :: | PW. 1 |
| Name | :: | முத்துமாரி |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Caste | :: | |
| Calling | :: | |
| Religion | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2024

---

எதிரி ஆஜர்.

08.07.2024

முதல் விசாரணை:

1. நான் தற்போது பாளையம்பட்டி பசும்பொன் நகரில் குடியிருந்து வருகிறேன். வழக்கின் விபத்தில் இறந்து போன நாகரத்தினம் எனது கணவர் ஆவார். மருத்துவம் சாராத மேற்பார்வையாளராக பந்தல்குடி அரசு மருத்துவமனையில் வேலை பார்த்து வந்தார். கடந்த 27.01.2023 ம் தேதி காலை 11.30 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது பந்தல்குடி அரசு மருத்துவமனையில் இருந்து எனக்கு போன் செய்து எனது கணவர் நாகரத்தினம் விபத்தில் காயம்பட்டு இருப்பதாகவும் அருப்புகோட்டை அரசு மருத்துவமனைக்கு வரசொன்னதன் பேரில் நான் அருப்புகோட்டை அரசு மருத்துவமனை சென்று சவக்கிடங்கில் பார்த்தபோது இறந்துவிட்டார்.

2. விபத்து சம்பவத்தின் போது எனது கணவர் எங்களுக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் தூத்துக்குடி மதுரை நான்கு வழிச்சாலையில் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ராமநாயக்கன்பட்டி விலக்கு அருகே வந்தபோது அவருக்கு பின்னால் அதே திசையில் வந்த வெள்ளை நிற கார் ஒன்று அவர் மீது விபத்து ஏற்பட்டதாக பின்னர் நான் தெரிந்து கொண்டேன். இது சம்மந்தமாக நான் பந்தல்குடி காவல்

நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு மற்றும் அதிலுள்ள கையெழுத்து என்னுடையது. **(புகார்மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் கு வி**

1. புகார் மனுவினை நான் எழுதவில்லை. நான் பதட்டத்தில் இருந்தேன் அதனால் பக்கத்தில் இருந்தவர்களிடம் சொன்னேன் அவர்கள் எழுதினார்கள். யார் எழுதினார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொன்ன மாதிரி சொன்ன நேரத்தில் சொன்ன முறையில் புகார் மனு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.